**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 2/2024**

**Date** : **03.02.2026**

**பி. வா.சா. 2 - புஷ்பம்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**2 மற்றும் 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

2018 ம் வருடம் எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாக கூறியுள்ளேன் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தை வயது முதிர்வு காரணமாக இயற்க்கை மரணம் அடைந்தார் என்றால் சரிதான். 2014 மற்றும் 2019 ல் எழுதியதாக கூறக்கூடிய உயில் ஆவணம் எனது தந்தையின் முழு சம்மதத்துடன் எழுதிய உயில் ஆவணம் என்றால் சரிதான். எனது தந்தையை நானும் எனது உடன்பிறந்தவர்களும் சேர்ந்து தான் பராமரித்து வந்தோம் என்றால் சரியல்ல எனது இளைய சகோதரன் ஏசுராஜன் மட்டும் பராமரித்து வந்தார். எனது தந்தையை எந்த பிள்ளைகளும் துன்புறுத்தவோ மிரட்டவோ கிடையாது என்றால் சரிதான். அவர் வாழந்த நாட்களில் சுயநினைவுடன் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக ஒருதலை பட்சமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**